# இல. தமிழர் மீது தமிழகஅரசு கடும் நடவடிக்கை

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 ஆனி 15 துல்ஹஜ் 16 இதழ் 138

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-06-1991

(சென்னை)

தமிழ்நாட்டில் அகதிகள் முகாமைத் தவிர்த்து, வெளி இடங்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர் அனைவரும் தங்களது பெயர், முகவரி, தொழில் பற்றிய முழு விபரங்களையும் அரசுக்கு ஒரு வார காலத்துக்குள் தெரியப்

[4ம் பக்கம் பார்க்க]

## இலங்கை தமிழ்மாணவர்கள் நாடு திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டில் கல்விகற்று வரும் இலங்கை தமிழ் மாணவர்கள் பலர் தமது படிப்பை இடையில் கைவிட்டுவிட்டு இலங்கைக்கு வந்துள்ளனர்; தமிழ்நாட்டில் இலங்கை

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர் பலர் கைது

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் பாதுகாப்பான ஒரு பகுதியில் பாதுகாப்பான இரு வீடுகளில் இருந்து பல தமிழர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இரு வீடுகளிலும் இருந்தே தற்கொலைப் படையினர் வீதியில் ஒன்றில் வெடிமருந்தை நிரப்பிக் கொண்டு சென்றதாகவும் பொலிசார் நம்புகிறார்களாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னைக்கு — சமாதானத் தீர்வு ஏற்படுத்த நோர்வேயும் முன்வந்துள்ளது

(ஒஸ்லோ)

இலங்கை இனப்பிரச்னைக்கு அமைதி வழித் தீர்வொன்றைக் காணும் நோக்கில் அவுஸ்திரேலியாவுடன் மற்றொரு ஐரோப்பிய நாடான நோர்வேயும் முன் வந்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக வடபகுதியில் முன்னர் சி-நோர் நிறுவனத்தில் கடமையாற்றிய அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளை சந்திக்க யாழ்ப்பாணம்வரவிருந்தார். எனினும் அண்மையில் ஏற்பட்ட சில அசம்பாவிதங்களால் இப்பயணம் தாமதப்பட்டுள்ளதாம்.

மேலும் விடுதலைப் புலிகளு சத்தில் அதனை நோர்வே தலை தெரிவித்திருந்தது. ... இலங்கை அரசு பேச்சுக்கள் ஒஸ்லோவில் நடாத்த ... நடத்த முன்வரும் நோர்வே அரசு விருப்பம் தற்போது இவ்விடயம்

[4-ம் பக்கம் பார்க்க]

## வவுனியா பகுதியில் ராணுவம் பின்வாங்கியது

(வவுனியா)

வவுனியா பேராசிரியர் குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவ காவலரணிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர்மீதும் புனோம் மீதும் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்; இதனால் பலத்த இழப்புடன் முகாம் திரும்பினர்.

இம்மோதலில் வீரவேங்கை கப்டன் வதனன் (கந்தசாமி ரவிச்சந்திரன், 4ம் யுனிற்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் அதிகாரிகள் யாழ். வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களைச் சேர்ந்த அதிகாரிகள் வெகு விரைவில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

ஜூலை மாத முதல் வாரத்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொக்கட்டிச்சோலை சம்பவம் ஒரு மிகப்பெரிய அழிவு

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினர் நடாத்திய படுகொலை சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் 67 சடலங்கள் புதைக்கப்பட்டும்

### வணபிதா மில்லர் பி.பி.ஸிக்குபேட்டி

56 சடலங்கள் காணமல் போயும் பலசடலங்கள் எரித்து அழிக்கப்பட்டுள்ளதாகவும்

[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழ் குழுக்கள் மோதல் 8 பேர் கைது

(சென்னை)

திருச்சி கோட்டப்பட்டு அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் இலங்கையைச் சேர்ந்த இரு தமிழ்க்குழுக்களிடையே நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலையடுத்து 8 தமிழ்ப் போராளிகள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மோதலைகட்டுப்படுத்தவந்த பொலிசாரையும் எதிர்த்து இவர்கள் தாக்குதல் நடாத்

(4ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில் பஸ் மீது கிளேமோர் தாக்குதல் 14 பயணிகள் ஸ்தலத்தில் பலி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் பொத்துவிலிலிருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த பஸ் பயணிகள் மீது இனந்தெரியாதவர்கள் கிளேமோர் தாக்குதலை மேற்கொண்டதாக நம்பப்படுகிறது. இத்தாக்குதலில் 14 பயணிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இதில் டென்மார்க்கைச் சேர்ந்த ஒருவரும் பலியானார்.

இச் சம்பவம்பற்றி தெரிய வருவதாவது: நேற்றுமுன் தினம் நள்ளிரவு கொழும்பு நோக்கிச்சென்றுகொண்டிருந்த இந்த பஸ் 'லகுகல' என்னு

(4-ம் பக்கம் பார்க்க)

★ கொழும்பில்

## பஸ், ரயில் நிலையங்கள் எங்கும் படையினர் உஷார் நிலையில்

கொழும்பு புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலும் கோட்டை ரயில்நிலையத்திலும் பஸ் நிலையத்திலும், புகையிரத நிலையத்திலும் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. உட்புகும் பயணிகள் பொதிகள் மற்றும் ஆவணங்கள் என்பன தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

[4ம் பக்கம் பார்க்க]

## தட்சர் அரசியலிலிருந்து ஒய்வு பெறுகிறார்

(லண்டன்)

பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சர் அரசியல் வாழ்க்கை

(4-ம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப்படைத்தாக்குதல்: தகவல் தருவோருக்கு 10லட்சம் ரூபா சன்மானம்

(கொழும்பு)

கொழும்பில் மீண்டும் தற்கொலைப்படைத் தாக்குதல் நடாத்தப்படலாமெனத் தகவல்கள் கிடைத்துள்ளதால் இது தொடர்பாக முக்கிய தகவல் தருவோருக்கு அரசு 10 லட்சம் ரூபா சன்மானமாக வழங்கவுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## இத்தாலிய சிறைகளில் 450 இலங்கையர்கள்

[ரோம்]

இத்தாலிய சிறைக்கூடங்களில் 450 இலங்கையர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தொழில்வாய்ப்புக்தேடி இத்தாலிக்கு சென்ற இவ்விலங்கையர்கள் போதைவஸ்து மற்றும் சமூகவிரோதச் செயல்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## கஞ்சா கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அரியாலை சச்சிதானந்தன் வீதியைச் சேர்ந்த திரு பெ. மார்க்கண்டு என்பவரிடம் இருந்து கஞ்சா விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### தேவை

பழைய பேப்பர்கள், புத்தகங்கள், சீமெந்து வெற்றுப்பைகள், உரப்பைகள் நியாய விலையில் வாங்கப்படும் இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்:- இல. 86 செம்மா தெரு, யாழ்ப்பாணம். (ஏ 1406)

கோபிக் உல் வேலை, பூந்தோட்ட வேலை செய்யக்கூடிய இரண்டு நடுத்தர வயதுடைய நல்ல ஒழுக்கமுடையவர்கள் உடனடியாகத் தேவை. பெருமாள்கோவில் தேவஸ்தான காரியாலயத்தில் காலை 10—11 மணிக்குமிடையிலும் பிற்பகல் 3—5 மணிக்குமிடையிலும் நேரடியாக சமூகம் கொடுக்கவும் தகுதியுடையவர்களுக்கு நல்ல மாதச்சம்பளம் வழங்கப்படும். (சி 4915)

### விற்பனைக்கு

மின்கைவற் சவலைப்பவுடர் 59 கிறாம் வெற்றுப் பைகளை நூறு கொடுத்து ஒரு அழகிய கைலேஞ்சியை அன்பளிப்பாகப் பெறுங்கள். 59 கிறாம் பக்கற் ஒன்று ரூபா 6/- மட்டுமே. 'மின்கைவற்', யாழ்ப்பாணம். (எ-1412)

### நிலவே நீ மயங்காதே

ரமணிச்சந்திரன் நாவலைப் படித்த மனத்திருப்தியை ஏற்படுத்தும் சமூக நாவல் தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம் செய்வதறியாது திகைக்கும் பெண் மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள். விற்பனையாகின்றது. [சி-4914]

### தரன் ஸ்ரூடியோ

அவசரமாக பாஸ்போட், அடையாள அட்டைப்படங்கள், றபர் சீல்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் முதலியன பெறுவதற்கு தரன் படப்பிடிப்பாளர், 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 4896)

### அர்பாள் திருமண சேவை

B. Sc, B. A., A/L சித்தி படைத்த மணப்பெண்களுக்கு Accountants, Engineers, Bank Staff, பட்டதாரி மணமக்கள் (Bridegrooms) தேவை. விண்ணப்ப முற்பணம் ரூபா 50/-, சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர் வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி 4921)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 4, 5)

கடந்த வருடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த புதிய கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஏழாவது) 30-06-91 ஞாயிறு மு. ப. 8-00 / மு. ப. 10-30 / பி. ப. 1-00 மணி. 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். பி. ப. 1-00 / பி. ப. 4-00 மக்கள் வைத்தியசாலை முன்பாக, குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி நடைபெறும். ஆண்டு 5 Paper Class (புதிய வகுப்புகள்) 29-06-91 சனி ஆரம்பமாவுள்ளன. (சி 4920)

## செயல்முறை பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

மனையியல், சங்கீதம், நடனம் போன்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண செயல்முறைப் பரீட்சைகள் 1989ம் ஆண்டுக்கும் 1990ம் ஆண்டு விசேட பரீட்சைக்கும் ஜூலை மாதம் பிற்பகுதியில் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் சம்மதம் தெரிவித்துள்ளார். (152)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



முல்லைத்தீவு, செம்மலை,
இந்திய இராணுவ முகாம்
நேரடி மோதலில் வீரமரணமடைந்த

## மேஜர் ரஞ்சன்

### [சுரேஷ்]

| வீர ஜனனம்: | வீர மரணம்: |
|---|---|
| 1968 - 02 - 27 | 1989 - 06 - 29 |

வீரத்தமிழ் வேங்கை மேஜர் ரஞ்சா நீ
தீரமாய்ப் போரிட்டு வீரசொர்க்கம் சென்றாயே.

எங்கள் தவப்புதல்வா இவ்வுலகம் உள்ளவரை
மங்காப் புகழ் பெற்றாய்! மரணத்திலும் வாழ்கின்றாய்

ஈழமண் காப்பதற்கு வாழ்வையே அர்ப்பணித்தாய்
ஈழத்தமிழ் மக்கள் இதயமெல்லாம் நீ இருப்பாய்

பெற்றவர்கள் உற்றவர்கள் பேரன்பு நண்பர்கள்
எல்லோரும் அஞ்சலித்து இதயத்தால் தொழுகின்றோம்.

வாழ்வு நிலைக்காதுன் வாழ்வில் நீ செய்திட்ட
தியாகம் நிலைத்திருக்கும் உன்வீரப் புகழ் நிலைக்கும்

பெற்றோர், சகோதர, சகோதரிகள்,
மச்சாள், மச்சான்மார், மருமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள், தோழர்கள்.

பன்னாலை,
தெல்லிப்பழை. (சி 4885)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடம் இருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. சைவசித்தாந்தத்தின் பேராசிரியர் (ஆறுமுக நாவலர் கொடைத்தவிசு)
2. மெய்யியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II.
3. மொழியியல் / இந்து நாகரீகத்தில் உதவி விரிவுரையாளர்:

சம்பள அளவுத் திட்டம்

பேராசிரியர்:
ரூபா 12,200—6X300-14,000/-
(மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I:
ரூபா 9,600 - 8 X 250 - 11,600/-
(மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II:
ரூபா 8,000 - 5 X 250 - 9,250/-
(மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/-
மாதமொன்றுக்கு
(நிலையானது)
ஆண்டொன்றுக்கு:

(துறைத் தலைவிருவரின் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரைப் பீடாதிபதி விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் அவரை அவர் 4,500/- ரூபா 10 X 200 - 6 500 (மாதம் ஒன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் வைக்க முடியும்.)

பேராசிரியர் பதவிக்கு விண்ணப்ப முடிவுத் தேதி 1991 - 09 - 30 ஆகும்.
ஏனைய பதவிகளுக்கு முடிவுத் தேதி 1991-08-07 ஆகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக் கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச. மீ. அளவுடைய கடித உறையும், ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23 ச. மீ. அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: சைவசித்தாந்தப் பேராசிரியர் (ஆறுமுக நாவலர் கொடைத் தவிசு) பதவிக்கான நியமனம் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமாக இருக்கும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1991-06-26 (எ 1411)

## தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை கதிர்வேல் முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

## 10லட்சம் பேருக்கு 'எயிட்ஸ்' நோய்

(புதுடில்லி)

இந்தியாவில் பத்து லட்சம் பேர் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாக அண்மையில் வெளியிடப்பட்ட வைத்திய அறிக்கை தெரிவித்துள்ளன.

## அத்வானி பதவி விலகினார்

(புதுடில்லி)

பாரதிய ஜனதா கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானி புதுடில்லி லோக் சபா தொகுதிக்கான தமது பதவியிலிருந்து நேற்று விலகினார்.

புதுடில்லி மற்றும் காந்தி நகர் தொகுதிகளிலிருந்து இவர் லோக்சபாவிற்கு தெரிவுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஸ)

மரணம், ஊனம்

## தொடர்பான விடயங்கள்

(யாழ்ப்பாணம்)

மரணம், ஊனம் சம்பந்தமாகப் பொதுமக்கள் யாழ். செயலகத்தின் புனர்வாழ்வுப் பகுதிக்கு வருகை தருவதைப் புதன்கிழமைகளில் மட்டும் வருகை தருவதாயின் பாதிக்கப்பட்ட ஏனைய மக்களின் கருமங்களையும், செய்து முடிப்பதற்கு உதவிபுரிந்தவர்களாக கருதப்படுவார்கள் என்றும் ஆதலால் புதன்கிழமைகளில் மட்டும் வருகைதந்து தங்கள் கருமங்களைச் செய்யும்படி செயலகத்திட்ட பணிப்பாளர் கேட்டுள்ளார். (153)

உலகம் முழுவதுக்குமான துரித தபால் சேவை

கனடா, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ்
உட்பட சகல நாடுகளுக்குமான கடிதங்கள்
விரைவாகச் சென்றடைய

வெளிநாட்டு தபால்களை
ஒப்படைக்க யாழ்ப்பாணத்தில்

DHL WORLDWIDE EXPRESS

C/o, Cosmos
Marketing Services,
120, K. K.S, Road, Jaffna.

(எ 1410)

# பனைவள ஆய்வரங்கும் கண்காட்சியும்

இன்று யாழ். பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகும் பனைவள ஆய்வரங்கும் கண்காட்சியும், எமது தேசிய வளமான பனையின் பயன்பாட்டை வெளிக்கொணர வைப்பதுடன், அதன் பொருளாதார முக்கியத்துவத்தையும், எதிர்காலத்தில் பனை வளத்தின் மேம்பாட்டையும் சித்தரிக்கின்ற ஓர் சிறப்பு நிகழ்ச்சி என்பதால் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது தேசிய வளமானது எமது பிரதேசத்திலேயே அடர்ந்து, பரந்து காணப்படும் வளங்களைப் பற்றிச் சிந்திக்காது அதனது மகிமையை உணராது அந்நிய டங்களைப் பயன்படுத்தும் உயர்சிந்தனையை இக் கண்காட்சியும் ஆய்வரங்கும் உருவாக்கும்.

பனை வளத்தின் பயன்பாடு விரிவடைந்து செல்லும் இவ்வேளையில் அதனது ஆராய்ச்சிகளும் தொடர்ந்து வளர்ந்து செல்கின்றது. இதன் பெறு பேறுகளையும், இந்த ஆராய்ச்சிகள் எதிர்காலத்தில் எவ்வாறான நிலையைப் பனை அபிவிருத்தியிலும் பயன்பாட்டிலும் ஏற்படுத்தும் என்பது போன்ற எதிர்பார்ப்புகளையும் இக்கண்காட்சியும், ஆய்வரங்கும் புலப்படுத்தும் என்பது உண்மை.

## சாற்று உற்பத்தி

பனையைப் பொறுத்தவரை பதை யாரும் மறுக்கமுடியாது. இன்று ஆரம்பமாகும் கண்காட்சியின் மூலம் எமது பனை வளப் பயன்பாடும், ஆராய்ச்சிகளும் ஓர் குறிப்பிட்ட காலப் பகுதியில் எந்த அளவிற்கு வளர்ந்துள்ளது என்பதை அவதானிக்கமுடிகிறது. அத்தோடு எதிர்காலத்தில் எவ்வளவு விரைவாக மேலும் நவீன முறையில் அபிவிருத்தி செய்யமுடியும் என்பதையும் நாம் கண்டுகொள்ள வாய்ப்புக் கிட்டும்.

பொருத்தமான காலத்தில் கற்பகதருவின் சிறப்பியல்புகளைச் சித்தரிக்கும் வகையில் யாழ். விஞ்ஞான மன்றமும், பனை அபிவிருத்திச் சபையினரும், தெ; ப. பொ. க: சங்கங்களும், ஆய்வு நிறுவனமும், பனை தென்னைவள அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து 'பல்கலைக்கழகத்தில் பனைவளத்தின் பெருமையைப் பாரீர்' எனச் சிறப்பு மிக்க ஓர் கண்காட்சியையும், ஆய்வரங்கையும் ஒழுங்கு செய்தமை மிகவும் மகிழ்வுக்குரிய ஓர் நிகழ்வு எனலாம்.

இந்நிகழ்வுகள் மேலும் எமது பனை வளப் பயன்பாட்டின் அபிவிருத்திக்கும், ஆராய்ச்சிக்கும் வழிகாட்டி, வளம் மிக்க பனை வளத்தை வளர்க்கும் உணர்வைத் தூண்டி, உலக மக்களே எமைக் கண்டு வியக்கும் வகையில் நாம் வாழ வழிகாட்டுவதுடன், பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்தும் ஓர் புதிய சமுதாய அமைப்பை உருவாக்கும் அத்திவாரத்தைத் தோற்றுவிக்கும் என்பதை உணரும்போது உளம் மகிழ்கின்றோம்.

—வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், பனை அபிவிருத்திச் சபையும்.

## தேசிய வளம் பற்றிச் சிந்திக்கத்தூண்டும் நிகழ்வு

கலாச்சாரப் பண்பாட்டுச் சீரழிவு, உடை, உணவுப் பாவனைகளே நவநாகரீகம் எனும் நிலையில் இருந்து இன்று அந்நிய மோகத்தால் தாம் செய்யும் தவறை உணர்ந்து எமது பிரதேச வளங்களைப் பற்றிச் சிந்திக்கும் நிலைக்கு வளர்ந்துள்ளதுடன், எமது சுதந்திரப் பற்றுடன் செயல்படும் நிலைக்கு மாறியுள்ளனர் என்பதை அவதானிக்கமுடிகிறது.

### பிரதேச வளங்கள்

இந்நிலையிலேயே அவர்களை எமது பிரதேச வளங்களைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டி, தமிழீழப் பிரதேசமெங்கும் தலைநிமிர்ந்து தன்னை நாடு வோருக்கு நலமெல்லாம் நல்கும் பனைவளத்தின் பயன்பாட்டையும், அதன் பொருளாதார முக்கியத்துவத்தையும், ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருட்களையும் தந்து எமது உடல் நோய்களையே நீக்கி எமை நீண்டகாலம் உயிர்வாழ வைக்கும் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள கற்பகதருவின் தன்னிகரற்ற சொடைத் திறனை வெளிக்கொணரும் இந் நிகழ்வு இன்றைய சூழலில் எம் மக்களுக்கு தேசிய வளத்தைப் பற்றி சிந்திக்கத் தூண்டும் ஓர் நடவடிக்கை எனலாம்.

எமது பிரதேசம் இன்று எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளில் உணவுப் பற்றாக்குறையும் மிக முக்கிய குறைபாடுகளில் ஒன்றாகவுள்ளது. இக் குறைபாட்டை எமது பிரதேச வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் பூர்த்திசெய்யலாம். தமிழீழமெங்கும் பல லட்சம் பனைமரங்கள் காட்சியளித்த போதிலும் அதன் மூலம் பெறப்படும் பயன் மிகமிகக் குறைவாகவேயுள்ளது. இவ்வளத்தையே முழுமையாகப் பயன்படுத்தும் நிலை மக்களுக்கு என்று உருவாகின்றதோ அன்று எமது தேவைகள் அனைத்தும் நிறைவுறும் என்பதில் ஐயமில்லை.

### பனை உணவு பொருட்கள்

ஏனைய பனை வளமுள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது பிரதேசத்திலேயே அதன் அடியில் இருந்து நுனி வரையும் பயன்படுத்தும் நிலை கண்டு பெருமைகொள்வோம் எனினும் எமது முழுத்தேவையையும் பூர்த்திசெய்யும் அளவுக்கு நம் வளராத நிலையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பனம் உணவுப் பொருட்களின் பயனை உணராத மக்களையும் எமது புதிய தொழில் நுட்பத் திறனினுல் நவீனமயப்படுத்தப்பட்ட உணவுப் பண்டங்களை உருவாக்கி அவர்களை தமது ஒருநேர உணவையாவதல் பனம் பண்

# இராணுவ நடவடிக்கையால் தந்தையை இழந்த பிள்ளைகளின் நிதி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இராணுவ நடவடிக்கையால் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கான பராமரிப்பு நிதி வழங்கும் திட்டத்திற்கு இலங்கை வங்கியின் பிரதான கிளையைச் சேர்ந்த ஊழியர்கள் மூன்று பிள்ளைகளுக்கு இரண்டு வருடத்துக்கான நிதியை வழங்கியுள்ளனர்;

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் இரண்டு பிள்ளைகளுக்கு இரண்டு வருடத்துக்கான நிதியை வழங்கியுள்ளனர்.

மேற்படி பராமரிப்புத் திட்டத்தின் கீழ் நிதி வழங்கும்படி கோரிப் பல விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும், இத்திட்டத்திற்கு உதவி செய்ய விரும்புபவர்கள் யாழ் பருத்தித்துறை வீதி, இலக்கம் 33இல் உள்ள யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்துடன் நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளும்படி சமாசத் தலைவர் இ. சோ. தியாகராசா தெரிவித்துள்ளார். (154)

## கொழும்பில் 27 பேருக்கு கலரா!

(கொழும்பு)

கொழும்பு நகரை சுற்றிய பகுதிகளில் கலரா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது:

இதுவரையில் கொழும்பு நகரில் மட்டும் 27 பேர் இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவ ஆய்வறிக்கை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது: (க)

# 6 கோடி ரூபா வெள்ளிப்பாளங்கள் சுங்கஅதிகாரிகளிடம்சிக்கின

(சென்னை)

இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் நேற்று முன் தினம் திடீர்ச் சோதனை நடாத்திய சுங்கப்பகுதியினர் 6 கோடி 33 லட்சம் ரூபா பெறுமதியான 255 வெள்ளிப்பாளங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வெள்ளிப் பாளங்களில் வெளிநாட்டு முத்திரை பொறிக்கப்பட்டிருந்ததாகச் சுங்கப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சென்னையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

# விலங்கு பரிபாலன டிப்ளோமா கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், விலங்குப் பரிபாலனம் தொடர்பான இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேற்படி டிப்ளோமா கற்கைநெறி வகுப்புகள் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படவிருக்கிறது.

ஒருங்கிணைந்த வெலிசறை இலங்கை விலங்கு பரிபாலன பாடசாலைகளிலும், அனுராதபுரம் விலங்கு பரிபாலன பயிற்சி நிலையத்திலும் இரண்டு வருட விலங்கு பரிபாலன டிப்ளோமா பயிற்சி நடைபெறவிருக்கிறது.

மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் இந்த வருடம் ஜூலை மாதம் 5 ஆந் திகதியன்று 17-25 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஆறு பாடங்களில் நான்கு திறமைச்சித்திகளும், க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் பௌதிகவியல், இரசாயனவியல் தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களுள் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்வேண்டும்.

ஜூலை மாதம் 5-ம் திகதிக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர் (கல்விப்பயிற்சி தகவல் பிரிவு) கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் த. பெ. இல 41, பேராதனை என்ற விலாசத்திற்கு விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். (153)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## இராசி பலன்

29-06-1991
சனிக்கிழமை

திதியை பி. ப. 12-35வரை, உத்தராடம் மாலை 6-16வரை, சித்தயோகம். இராகுகாலம் காலை 8-56 முதல் 10-26வரை. சுபநேரம் மாலை 2-56 முதல் 4 26 வரை.

மேடம்; தொழில் சிறப்பு, பெரியோர் ஆசி, குடும்பச் சிறப்பு.

இடபம்; கன்னியக்குறைவு அறபர் நேசம், மனக்குமுறல்.

மிதுனம்; மதிநுட்பம், உடல்நிலை பாதிப்பு, பணமுடை.

கடகம்; அதிர்ஷ்டம், மாமனார் சகாயம், சகோதரர் பகை.

சிங்கம்; தொழில்பாராட்டு, புதிய முதலீடு, மனநிறைவு.

கன்னி; குறை கேட்டல், புத்திரர்கவலை, வாக்குவாதம்.

துலாம்; போட்டி நிலை, சொத்துத் தகராறு, பதவி மாற்றம்.

விருச்சிகம்; வைத்தியச் செலவு, சுபகாரிய செலவு, தெய்வதரிசனம்.

தனுசு; மனச்சுமை, கடன் தொல்லை, உடல்சோர்வு.

மகரம்; பயணங்களால் அனுகூலம், மனமகிழ்ச்சி, கருத்து முரண்பாடு.

கும்பம்; பகைவர் துன்பம், குடும்பச்செலவு, கற்பனை மிகுதி.

மீனம்; நல்ல செய்தி, வசதி வாய்ப்பு; கௌரவம்.

— ஜோஸ்யர்


# மகாபொல கொடுப்பனவு

7-வது தவணைப்பணம்

முதலாம் வருடம்

| | | |
|---|---|---|
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 28-06-91 | 9-00 - 12-00 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 01-07-91 | 1-30 - 03-00 |
| | 02-07-91 | 9-00 - 12-00 |

7-வது 8-வது தவணைப்பணம்

2-ம், 3-ம், 4-ம் வருடம்

| | | |
|---|---|---|
| பௌதிக விஞ்ஞானப் பிரிவு | 28-06-91 | 1-30 - 03-00 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 02-07-91 | 1-30 - 03-00 |
| | 03-07-91 | 9-00 - 12-00 |

1-வது 8-வது தவணைப்பணம்

| | | | |
|---|---|---|---|
| கலைப்பிரிவு | 1-ம் வருடம் | 01-07 91 | 9-00 - 12-00 |
| வர்த்தகப்பிரிவு | 3-ம், 4 ம் வருடம் | 03-07-91 | 1-30 - 03-00 |
| மருத்துவப்பிரிவு | 3-ம், 5-ம் வருடம் | 04-07-91 | 9-00 - 12 00 |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2- ரூபா 2/- பெறுமதியான முத்திரை

(எ 1408) பதிவாளர்

# ஆசிரியர்கள் வாரம் ஒருமுறை

## கல்விப்பணிப்பாளரை சந்திக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் யாழ். கல்விப் பணிப்பாளரை ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை 1.30 மணிக்குப் பின்பு சந்திக்க முடியும். இவ்விதிலை மீறி வேறு தினங்களில் வரும் ஆசிரியர்களுக்கு அன்றையதினம் சம்பளமற்ற விடுமுறையாகக் கணிக்கப்படும்.

இவ்வாறு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: பாடசாலை நடைபெறும் நாட்களில் வகுப்புகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் 15 நிமிடங்கள் தேசப்பிரயாசம் கற்பிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் காரணமின்றி வெளியில் செல்லல் தடை செய்யப்பட்டுள்ளது. முக்கியமாக தனியார் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் கற்பித்தல் தடை செய்யப்படுதல் வேண்டும்.

ஒழுக்கம் தவறும் ஆசிரியர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலை மட்டத்தில் தற்போதுள்ள ஆசிரிய வளத்தை தேவைக்கேற்ப பகிர்ந்து செய்யப்படுதல் வேண்டும்.

பாடசாலை மேற்பார்வை முறையாகவும்; திடீர் விஜயங்கள் மூலம் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

உணவுற்பத்தி, பாடசாலை பொருட்களை பாதுகாத்தல் மலசலகூட வசதி குறைவான பாடசாலைகளில் தற்காலிக மலசலகூடம் அமைத்தல் போன்ற கருமங்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் நிகழ வேண்டும்.

ஆண்டு ஆறுக்குபிட்டுள்ள பாடசாலைகள் இருநேர பாடசாலைகளாக இயக்க வேண்டும். அப்பாடசாலைகளை காலை 8-30 மணிக்குத் தொடங்கி 3-30 மணி வரை நடாத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (152)

# வவுனியா நோக்கி

## படைகள் விரைவு

(வவுனியா)

வவுனியா நோக்கி அநுராதபுரத்திலிருந்து பெருமளவு படையினர் வந்து கொண்டிருப்பதாக கொழும்பிலிருந்து வந்த பயணிகள் தெரிவித்துள்ளனர்.

கனரக வாகனங்கள், ட்ரக்குகள் சகிதம் படையினர் வவுனியா நோக்கி மதவாச்சியை தாண்டி வந்து கொண்டிருந்ததை நேரில் கண்டதாக பலர் தெரிவித்தனர்.

வவுனியா பகுதியில் மீண்டுமொரு தாக்குதலை நடாத்தும் நோக்கில் இவர்கள் வருவதாகவும் கூறப்படுகிறது. (153-சி)

### அம்பாறை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிடத்தில் கிராமமொன்றில் கிளைமோர் தாக்குதலில் சிக்கி தீப்பற்றியதாம்.

இதிலிருந்த பயணிகள் பஸ்ஸிலிருந்து தப்பி வெளியேறிய போது இவர்கள் மீது துப்பாக்கி நபர்கள் தாக்குதலை மேற்கொண்டனராம். இதில் பதினாலு பயணிகள் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். ஐவர் காயமடைந்தனர், 11 பேர் தப்பியோடிவிட்டனராம். இதில் கொல்லப்பட்ட டென்மார்க் பிரஜை பொத்துவிலில் உணவுச்சாலை ஒன்றை நடத்துபவராம். [ரி-சி]

### வெளிநாட்டு அதிகாரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தின் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதுவராலயத்தை சேர்ந்த முதலாவது செயலாளர் திரு. கிளேட் பிரஞ்சியர் இலங்கையிலுள்ள கனடா தூதுவராலயத்தைச் சேர்ந்த திரு. டேவிட் பிறேஸல், திரு. பிற்றர் டிக் ஆகியோரும் யாழ்ப்பாணம் வரவிருப்பதாக கூறப்படுகிறது. (153)

### இத்தாலிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுடுபட்டதைத் தொடர்ந்து அவர்கள் மீது இத்தாலிய அரசு வழக்குத் தொடர்ந்து தீவிர விசாரணையின் பின்னர் அவர்கள் சிறையிலிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சமூகவிரோதச் செயல்களில் இலங்கையர் தொடர்ந்து ஈடுபடுவதால் ஐரோப்பிய நாடுகளில் இலங்கை இளைஞர்களுக்கு நற்பெயர் இல்லாமல் போய்விடுமென அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (க)

### கொழும்பில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கொழும்பு நகர் எங்கும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### தட்சர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார் தமது எம். பி. பதவியையும் ராஜினாமா செய்யவுள்ளார்.

பிரிட்டனின் அடுத்த பொதுத்தேர்தலிலும் தாம் போட்டியிடப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது அரசின் பல நடவடிக்கைகளையும் வன்மையாக கண்டித்தும் உரையாற்றியுள்ளார். (இ)

### இலங்கைத் தமிழ்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாணவர்களுக்கு பல இடையூறுகள் விளைவிக்கப்பட்டுவருவதாகவும், குறிப்பாக பெண்கள் தங்கியிருக்கும் விடுதிகளுக்கும், வீடுகளுக்கும் இரவுநேரங்களில் சரமாரியாக கல்வீசப்படுவதாகவும், இது பற்றி பொலிசாருக்கு முறையீடு செய்தால் அதை அவர்கள் உதாசீனம் செய்வதாகவும், சிற்றுண்டிச் சாலைகளிலும் வேறுபாடுகள் காட்டப்படுவதாகவும், இலங்கை திரும்பியுள்ள பல மாணவிகள் தெரிவித்துள்ளனர். (வி)

# இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ரோட்டரிக் கழகத்தினர் 50 வது ஆண்டு நிறைவு பொன் விழாவை யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு கொண்டாடுகின்றனர்.

பொன்விழா வைபவம் ரோட்டரிக்கழகத்தலைவர் ரோட்டரியன் வி. ரி. ஜெலிங்கம் தலைமையில் நடைபெறும். மனமகிழ்ச்சியாளர் எஸ். திருநாவுக்கரசு இதில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

### தற்கொலைப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான அறிவிப்பொன்று நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பில் மேலும் இருகுண்டுத் தாக்குதல் நடாத்த தற்கொலைப் படையினர் இருவர்களுடன் தயாராக இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

### இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து இலங்கையிலுள்ள நோர்வே தூதரகம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (153-சி)

### பஸ், ரயில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகம் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலையடுத்தே பாதுகாப்பு மற்றும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

### தமிழ்க் குழுக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தியதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தமிழ் இயக்கங்களின் இத்தகைய நடவடிக்கையை அடுத்து திருச்சி கோட்டைப்பகுதி அகதி முகாமிற்கு பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழகத்தில் அகதிமுகாம்களில் தங்கியுள்ள சுமார் ஒருலட்சத்து 75 ஆயிரம் பேரில் 5 சதவீதமானவர்கள் விடுதலைப்புலிகள் அல்லாத வேறு அமைப்புகளை சேர்ந்தவர்களென்றும், இவர்கள் போராளிகளுக்கான சிறப்பு முகாமிற்கு அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க-சி]


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

## யாழ். கிளை

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 1-7-91 திகதி பிற்பகல் 3-00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர் அனைவரையும் இதில் பங்கு பற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

கௌரவ செயலாளர்

ச. இரவீந்திரராசா

73, கண்டி ரோட், யாழ்ப்பாணம். (ஏ-1414)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/180396/81

## திலீபன் ஞாபகார்த்த:

# தடகள விளையாட்டு விழா

## பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் ஆதரவில் தியாகி திலீபன் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான தடகள விளையாட்டு விழா ஒன்றினை ஏற்பாடுசெய்யும் பொருட்டு கலந்துரையாடல் ஒன்றுக்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் நாளை 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10-00 காலை மணிக்கு மாவட்ட செயலகம்கோட்டாவில் நடைபெறும்.

எனவே விளையாட்டு அதிகாரிகள், இளைஞர்சேவை அதிகாரிகள், மற்றும் பிரதேசங்களில் நியமனம்பெற்ற விளையாட்டுப் பொறுப்பாளர்கள் ஆகியோரை இக்கலந்துரையாடலில்கலந்துகொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

### வவுனியா

[1ம் பக்கத்தொடர்ச்சி]

பாவற்குளம், வவுனியா) வீரமரணமடைந்தார்.

இதேவேளை கடந்த 20ம் திகதி ஆனையிறவில் இடம்பெற்ற நேரடிமோதலில் வீரவேங்கை இந்திரன் (அருளானந்தன் பரமானந்தம், பாலமுனை, மண்டூர், மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார். (சி)

# பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான சம்புரோக்ஷண பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை 30-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிகழவுள்ளது. [56]

### இல. தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தவேண்டுமென்று கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இலங்கைத் தமிழர் அனைவரும் மேற்குறிப்பிட்டதன் பிரகாரம் தமது முழு விபரங்களையும், தாம் குடியிருக்கும் பகுதியிலுள்ள காவல் நிலையங்களில் உடனடியாகப் பதிவு செய்துகொள்ளவேண்டும், அப்படிச் செய்யத் தவறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதுடன், அவர்கள் உடனடியாக நாட்டிலிருந்துவெளியேற்றப்படுவார்கள் என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இதேநேரம் தமிழ்நாட்டில் உள்ள கட்டிட உரிமையாளர்களும் தமது இருப்பிடங்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களைப் பற்றிய முழுவிபரங்களையும் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தெரியப்படுத்த வேண்டும், அப்படிச் செய்யத் தவறுபவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என, அரசு கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளது. (வி)

### கொக்கட்டிச்சோலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியிலுள்ள அமெரிக்க குருவான வண. பிதா மில்லர் பி. பி. ஸி. க்கு தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் இப்பகுதிக்கு நேரடியாக சென்ற பி.பி.ஸி. நிருபர் வண. பிதா மில்லரையும் அப்பகுதி மக்களிடமும் மேற்படி சம்பவம் குறித்து பூரண விபரங்களை விளக்கமாக பெற்றார்.

இதன் போது வண. பிதா மில்லர் மேலும் தெரிவிக்கையில்; இச்சம்பவத்தில் எமக்கு தெரியக் கூடிய முறையில் 123 தமிழர் கொல்லப்பட்டனர். 49 பேர் படுகாயமடைந்தனர். 149 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. 342 வீடுகள் பெருமளவு சேதம். இது ஒரு மிகப்பெரிய அழிவு. இச்சம்பவம் தொடர்ந்தும் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

முன்னர் நடைபெற்ற சம்பவங்களுக்குச் சட்டரீதியான எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படாததால் இதுபோன்ற சம்பவங்கள் மேலும் தொடர்கிறது.

உள்ளூர்வாசி ஒருவர் தெரிவிக்கையில்,

வீடுகளிலிருந்தபலஇளம் பெண்களை வெளியே இழுத்து வந்துமானபங்கப்படுத்தியதை தாம்நேரில் பார்த்ததாகவும் அவர் கூறினார். இவரது பேட்டியும் இதன்போது ஒலிபரப்பப்பட்டது.

இது தொடர்பாக அரசு நியமித்துள்ள ஆணைக்குழு உண்மையை மூடி மறைத்து விடுமெனப் பலரும் திரு. மிஸ் மோறிஸிடம் சந்தேகம் தெரிவித்தனர். (சி)


# மரண அறிவித்தல்

## சபாபதிப்பிள்ளை செல்லையா

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை செல்லையா அவர்கள் 27-06-91 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை நாகம்மா அவர்களின் மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து நாகமுத்து ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற வள்ளியம்மை, அப்பாப்பிள்ளை, காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும், கந்தையா, சிற்றம்பலம் ஆகியோரின் சகலனும், விக்கினேஸ்வரி, சிவனேஸ்வரி, செல்வநாதன் [சிப்சைட் - தலைவாக்கொல்லை], கோபாலகிருஷ்ணம் [சிப்சைட் - தலவாக்கொல்லை], செல்வரஞ்சிதம் [மேற்கு ஜேர்மனி], கணேசமூர்த்தி [வெஸ்ரேன் நகை மாளிகை], தவமலர் ஆகியோரின் தந்தையாரும், ஆனந்தசிவா [வெஸ்ரேன் நகை மாளிகை உரிமையாளர், கொழும்பு], பரமசிவம் [கீர்த்தா அச்சக உரிமையாளர், சங்கானை], வசந்தி ஆகியோரின் மாமனாரும், ஏகாம்பரம், செல்வக்குமார் [சிப்சைட் - தலவாக்கொல்லை] ஆகியோரின் சித்தப்பாவும், துஷ்யந்தன், கீர்த்தா' நிசாந்தி, கோபிநாத், டினேஸ் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 29-06-1991 (இன்று) சனிக்கிழமை காலை பத்து மணியளவில் விளாவெளி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ச. அப்பாப்பிள்ளை

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (சி 4919)